# 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கான Water Smart® துணையுதவிக் குறிப்புகள்.

## கனடாவின் உயிர்காப்பு நிபுணத்துவ நிறுவனமான - Lifesaving Society யிடமிருந்து



**நீரில் மூழ்குதல் குறித்து**

- 10 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கேற்படும் தவிர்க்கக்கூடிய இறப்புகளில், இரண்டாவதாக முன்னணி வகிக்கும் காரணி நீரில் மூழ்குதலாகும். 1-4 வயதுக் குழந்தைகள் உயர் ஆபத்தில் உள்ளவர்கள்.
- ஒவ்வோராண்டும் கனடாவில் ஏறக்குறைய 500 பேர் நீரில் மூழ்குகின்றனர்.
- நீரில் மூழ்குதல் ஒரு விரைவான, மௌனமான கொலையாளி. ஒரு குழந்தை 10 செக்கன்களிலும் நீரில் மூழ்க முடியும். பாதிப்புக்குள்ளாவோர், உதவிக்கென அரிதாகவே கூப்பிடுகிறார்கள், கையசைக்கிறார்கள், சமிக்ஞையிடுகிறார்கள். ஏனெனில் நீருக்கு மேலாகத் தமது தலைகளை அவர்களால் தூக்க முடியாது.

**தமது குழந்தைகளைக் கவனமாகக் கண்காணிக்கும் ஒரு பொறுப்பு பெற்றோருக்கு உண்டு.**

- நீர்நிலைகளைச் சுற்றி, உங்கள் குழந்தைகள்மீது எப்போதும் கண் வைத்திருங்கள். எட்டக்கூடிய தூரத்திலிருங்கள்.
- மேற்பரப்பிலிருக்கும் வகையில், நீச்சல் குளத்தில் அல்லது நீர்க்கரையில் உங்கள் குழந்தைகளை மிதக்கும் உயிர்காப்பு மேற்சட்டையுடன் வைத்திருங்கள். ஓர் உயிரைக் காக்கத் தேவையான செக்கன்களை இது உங்களுக்குத் தரக்கூடும்.
- தொட்டிநீர் வடிந்தோடும்வரை அல்லது உங்கள் குழந்தையை அங்கிருந்து அகற்றும்வரை தொட்டியருகே நில்லுங்கள்.
- நான்கு புறங்களும் வேலியெழுப்பி, பின்வளவு நீச்சல் குளங்களைச் சென்றடைதலைக் கடுமையாகக் கட்டுப்படுத்துங்கள்.
- பாவனையிலில்லாத நீச்சல் தொட்டிகளையும் வாளிகளையும் வெறுமையாக்கிக் கவிழ்த்து வையுங்கள்.
- உங்கள் பகுதி நீச்சல் குளத்திலுள்ள Parent & Tot பாடங்களைப் படியுங்கள். நீருக்கான ஒரு நேர்மறை அறிமுகம், உங்கள் குழந்தைக்கு ஓர் ஆயுட்கால மகிழ்வைத் தரமுடியும். ஒரு வழிகாட்டுச் சூழமைப்பில் பெற்றோருடன் பாலகர்கள் நீருக்குப் பழக்கப்பட்டுவிடுகிறார்கள்.

LIFESAVING SOCIETY
*The Lifeguarding Experts*

சகல குழந்தைகளும் நீந்தக் கற்கவேண்டும். அவர்களுக்கு எங்களால் கற்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுக, www.lifesavingsociety.com அல்லது உங்கள் பகுதி நீச்சல் குளத்தினருடன் தொடர்பு கொள்க.

® Water Smart என்பது Royal Life Saving Society Canada வின் ஒரு பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடாகும்.